# வருகையாளர்களுக்கான தரவு தனியுரிமை அறிவிப்பு (சர்வேதச பதிப்பு)

*பதிப்பு 1.0 | 14 நவம்பர் 2022*

# பதிப்புரிமை தகவல்கள்

*இந்த ஆவணம் LTIMindtree Limited-இன்(LTIMindtree) பிரத்தியேகமான சொத்தாகும்; பெறுபவர் LTIMindtree-இன் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் எழுத்துப்பூர்வமான ஒப்புதலின்றி எந்த விதத்திலும் இந்த ஆவணத்தில் உள்ள ரகசியமான மற்றும் தனியுரிம தகவல்களை நகலெடுக்கவோ, அனுப்பவோ, பயன்படுத்தவோ அல்லது வெளிப்படுத்தவோ கூடாது.*

## திருத்தியமைத்தல் வரலாறு

**தயவு செய்து சமீபத்திய பதிப்பை மேலே வைக்கவும்**

| பதிப்பு | மாற்றம் குறித்த விவரிப்பு | பிரிவுகள் | தேதி | ஆசிரியர் | மதிப்பாய்வு செய்தவர் | ஒப்புதல் அளித்தவர் |
|---|---|---|---|---|---|---|
| *1.0* | தொடக்கநிலை ஆவணம் | அனைத்தும் | *14 நவம்பர் 2022* | தரவு தனியுரிமை அலுவலகம் | சட்டம் சார்ந்தவர் | தரவு தனியுரிமை அலுவலர் |

## மேற்கோள்கள்

*மேலும் விவரங்களுக்கு, தயவு செய்து பின்வரும் ஆவணங்களைப் பார்க்கவும்:*

| இல்லை | ஆவணத்தின் பெயர் | பதிப்பு | இடம் |
|---|---|---|---|
| *1.* | *LTIMindtree* பொது தரவு தனியுரிமை அறிக்கை | *1.0* | *https://www.ltimindtree.com/general-privacy-policy/* |
| *2.* | *LTIMindtree* பொது தரவு தனியுரிமை கொள்கை | *1.0* | *https://www.ltimindtree.com/privacy_policy/* |
| *3.* | *LTIMindtree* குக்கி கொள்கை | *1.0* | *https://www.ltimindtree.com/cookie-policy/* |

# பொருளடக்கம்

பதிப்புரிமை தகவல்கள்....2
திருத்தியமைத்தல் வரலாறு....2
மேற்கோள்கள்....2
1 அறிமுகவுரை....3
2 நோக்கம்....4
3 வரையறைகள்....5
4 சேகரிக்கப்படும் தனிப்பட்ட தரவுகள் என்ன....8
5 உங்களின் தனிப்பட்ட தரவுகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் எப்படிச் சேகரிக்கிறோம்9
6 செயலாக்கத்தின் நோக்கம் மற்றும் சட்ட அடிப்படை....9
7 இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகளின் செயலாக்கம்....9
8 18 வயதிற்குக் கீழ் உள்ள தனிநபர்களின் தனிப்பட்ட தரவுகள்....9
9 உங்களின் தனிப்பட்ட தரவுகளை நாங்கள் யாரிடம் பகிரக்கூடும் (தனிப்பட்ட தரவுகளின் பெறுநர்கள்/வகைகள்)....10
10 தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்களின் தக்கவைப்பு மற்றும் நீக்கம்....10
11 எல்லை கடந்து அனுப்புதல்....11
12 தனிப்பட்ட தரவுகள்/ தனிப்பட்ட தகவல்கள்/ இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு....11
13 கண்காணித்தல்....12
14 தனிப்பட்ட தரவுகளின் விற்பனை....13
15 நீங்கள் உங்களின் தனிப்பட்ட தரவுகளை வழங்கத் தவறினால்....13
16 தரவுக்குரியவர்களின் உரிமைகள்/எனக்கு என்ன உரிமைகள் உள்ளன?....13
17 தானியங்கு முடிவெடுத்தலின் இருப்பு....15
18 மாற்றங்கள் குறித்து எங்களிடம் தெரிவிப்பதற்கான உங்களின் கடமை....15
19 தொடர்பு விவரங்கள், புகார்கள் மற்றும் குறைகள்....16
20 எங்களின் தனியுரிமை அறிவிப்பில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள்....17

# அறிமுகவுரை

இந்தியாவில் இணைக்கப்பட்டு, கேட் எண். 5, L&T தொழில்நுட்ப மையம், சகி விகார் சாலை, போவை, மும்பை - 400072, இந்தியா என்ற தன் பதிவு செய்யப்பட்ட முகவரியில் செயல்படும், உலகம் முழுவதும் மற்றும் ஐரோப்பாவில் பல கிளைகளையும் துணை நிறுவனங்களையும் கொண்டுள்ள LTIMindtree Limited-இன்

(“LTIMindtree” அல்லது "நிறுவனம்" அல்லது "நாங்கள்", "எங்கள்", "எங்களுக்கு") வளாகங்களுக்குள் நீங்கள் வருகை தரும் நோக்கத்திற்காக, (பிரிவு 6-இல் விவரிக்கப்பட்டுள்ளபடி) நோக்கத்தின் நிர்வாகம், மேலாண்மை மற்றும் செயல்திறனுக்காக அவசியம் என்பதால் உங்களைக் குறித்த தனிப்பட்ட தரவுகளை நாங்கள் சேகரித்து, வைத்துக்கொண்டு, செயலாக்கம் செய்து, அனுப்புபோம்.

தரவுக்குரியவர்களின் தனியுரிமை உரிமைகளையும் அவர்களின் தனிப்பட்ட தரவுகளையும் பாதுகாப்பதென்பது ஒரு தனிநபரின் அடிப்படை உரிமையாகவும், உலகின் பல பகுதிகளில் ஒரு சட்டரீதியான தேவையாகவும் இப்போது கருதப்படுகிறது. LTIMindtree, ஒரு உலகளாவிய நிறுவனமாக இருப்பதால், தரவுக்குரியவர்களின் தனியுரிமையை மதிக்கிறது பொருந்தக்கூடிய தரவு தனியுரிமை சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க உறுதியாக உள்ளது (EU பொதுத் தரவு பாதுகாப்பு ஒழுங்குமுறை 2016/679 (“GDPR”), UK சட்டத்தில் உள்ள GDPR (“UK GDPR”) (GDPR குறித்து இந்தக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை UK GDPR-ம் உள்ளடக்கியதாகும்) கலிஃபோர்னியா நுகர்வோர் தனியுரிமைச் சட்டம், கலிபோர்னியா தனியுரிமைச் சட்டம், தனியுரிமைச் சட்டம் 1988 (ஆஸ்திரேலியா) ஆஸ்திரேலிய தனியுரிமைக் கோட்பாடுகள் (APP),தரவு பாதுகாப்பு சட்டம் 2018 (UK), தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000 தகவல் தொழில்நுட்ப விதிகளுடன் படிக்கப்படும், (முறையான பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகள் அல்லது தகவல்கள்) 2011 மற்றும் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டம் 2012 (சிங்கப்பூர்), தனியார் தரப்பினர் வைத்திருக்கும் தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்கான ஃபெடரல் சட்டம் மற்றும் அதன் விதிமுறைகள் (மெக்சிகோ) ("LFPDPPP, அதன் ஸ்பானிஷ் சுருக்கம்), தரவுப் பாதுகாப்பிற்கான சுவிஸ் ஃபெடரல் சட்டம் 1992 மற்றும் செப்டம்பர் 1, 2023 வரை, தரவுப் பாதுகாப்பிற்கான சுவிஸ் ஃபெடரல் சட்டம் 2020, தனிப்பட்ட தரவு பாதுகாப்பிற்கான பெடரல் ஆணை-சட்டம் எண். 45/2021 (UAE), 2013-இன் தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு சட்டம் 4 (தென்னாப்பிரிக்கா), கனடா நாட்டின் தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு மற்றும் மின்னணு ஆவணங்கள் சட்டம் (PIPEDA), மற்றும் அது போன்ற எதாவது குறிப்பிடத்தக்க மாகாணச் சட்டம், தனிப்பட்ட தரவு (தனியுரிமை) கட்டளை வரம்பு. 486 (ஹாங்காங்), தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு சட்டம் ("PIPL") (சீனா), தனியுரிமைச் சட்டம் 1988 (Cth) (ஆஸ்திரேலியா) மற்றும் பொருந்தக்கூடிய பிற தனியுரிமைச் சட்டங்கள் உட்பட ஆனால் அவை மட்டுமல்லாமல் LTIMindtree-இன் தரவுகள் செயலாக்கம் மற்றும் தொழில் செயல்பாடுகளுக்குப் பொருந்தும் அளவுக்கு மற்ற சட்டங்களும்) (“தரவு தனியுரிமைச் சட்டங்கள்”).

இந்தப் படிவத்தின் நோக்கத்திற்காக, "வளாகம்" என்பது நீங்கள் பார்வையிடும் LTIMindtree-இன் வளாகம் ஆகும்.

நாங்கள் உங்களின் தரவுகளைத் தரவுகள் தனியுரிமை சட்டங்களுக்கு இணங்கக் கையாள்கிறோம், மேலும் பின்வருவனவற்றைக் குறித்து உங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த அறிவிப்பின் நோக்கமாகும்:

- எந்தத் தனிப்பட்ட தரவுகளை நாங்கள் சேகரிக்கிறோம்?
- உங்களின் தனிப்பட்ட தரவுகளை நாங்கள் எப்படிச் சேகரித்துப் பயன்படுத்துகிறோம்?
- செயலாக்கத்தின் நோக்கம் மற்றும் சட்ட அடிப்படை
- தனிப்பட்ட தரவுகளை நாங்கள் எப்படிப் பகிர்கிறோம் மற்றும் வெளிப்படுத்துகிறோம்?
- உங்களிடம் உள்ள உரிமைகள் என்ன?
- தனிப்பட்ட தரவுகளை நாங்கள் எப்படிப் பாதுகாப்பாக வைக்கிறோம்?
- தரவு தனியுரிமை தொடர்பாக எங்களை எப்படித் தொடர்புகொள்வது?

# நோக்கம்

பொருந்தும் தன்மை: எங்களின் அலுவலகங்களுக்கு வருகை தரும் வாடிக்கையாளர்கள், வேலைக்கு விண்ணப்பித்துள்ளவர்கள், பணியாளர்கள், மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர்கள், விற்பனையாளர்கள்,வழங்குநர்கள், விருந்தினர், பயிற்சியாளர்கள், பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட ஆனால் அவர்கள் மட்டுமல்லாமல் அனைத்துப் வருகையாளர்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். இந்த அறிவிப்பானது எந்தவொரு பணி ஒப்பந்தத்தின் அல்லது சேவைகளை வழங்குவதற்கான

மற்ற ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அமையாது. எங்களுடனான உங்களின் கருத்துப் பரிமாற்றத்தின்போது உங்களால் வெளிப்படுத்தப்பட்டு LTIMindtree-ஆல் செயலாக்கம் செய்யப்பட்ட தனிப்பட்ட தரவுகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களை இது உள்ளடக்கியதாக இருக்கும்.

பொறுப்பு: LTIMindtree, உங்களைக் குறித்து அதனிடம் வைத்துள்ள எந்தவொரு தனிப்பட்ட தரவுகள் மற்றும் தனிப்பட்ட தகவல்கள் பொறுத்தவரை ஒரு தரவு கட்டுப்பாட்டாளராகச் செயல்படுகிறது (கீழே வரையறுக்கப்பட்டுள்ளபடி). தனிப்பட்ட தரவுகள் மற்றும் தனிப்பட்ட தகவல்கள் தரவு தனியுரிமை சட்டங்களுக்கு இணங்கப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வது LTIMindtree-இன் பொறுப்பாகும். தரவு கட்டுப்பாட்டாளராகச் செயல்படக்கூடிய தொடர்புடைய நிறுவனங்கள் இந்த அறிவிப்பின் பிரிவு 9-இல் பட்டியலிடப்பட்டுள்ளன.

ஏற்கத்தக்க தொழில் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக, சட்டக் கடமைகளுடன் இணங்குவதற்காக மற்றும் பதிவை வைத்துக்கொள்ளும் நோக்கங்களுக்காக உங்களைக் குறித்த தரவுகளை நாங்கள் வைத்துக்கொண்டு செயலாக்கம் செய்ய வேண்டும். நாங்கள் வைத்திருக்கும் மற்றும் செயலாக்கம் செய்யும் தரவுகளானது மேலாண்மை, செயல்பாட்டு மற்றும் நிர்வாக நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்படும். நாங்கள் தொழிலை நடத்தவும், உங்களுடனான எங்களின் உறவை பயனுள்ளதாக, சட்டரீதியானதாக, பொருத்தமானதாகக் கையாளவும் உதவ, நீங்கள் எங்களுடன் இணைந்திருக்கும்போதும், நீங்கள் எங்களை விட்டுச் செல்லும்போதும், நீங்கள் எங்களை விட்டுச் சென்ற பிறகும் நாங்கள் அதை வைத்துப் பயன்படுத்துவோம்.

## வரையறைகள்

கொள்கையில் பயன்படுத்தப்படும் சொற்களில் சிலவற்றின் பொருள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

| சொல் | விவரிப்பு |
|---|---|
| தனிப்பட்ட தரவுகள் | அடையாளம் காணப்பட்ட அல்லது அடையாளம் காணப்படக்கூடிய சாதாரண நபருடன் தொடர்புடைய எதாவது தகவல்கள் ("தரவுக்குரியவர்"); பொருந்தும் தரவு தனியுரிமை சட்டங்களின் கீழ்த் தரவுக்குரியவரின் "தனிப்பட்ட தரவுகள்" அல்லது "தனிப்பட்ட தகவல்கள்" உள்ளிட்டவையாக அமையும் எதாவது தகவல்கள், நேரடியாக அல்லது மறைமுகமாக அடையாளங்காணக்கூடியதாகச் சாதாரண நபருடன் தொடர்புடைய பெயர், அடையாள எண், உள்ளூர் தரவுகள், இணையவழி அடையாளங்காட்டிப் போன்ற அடையாளங்காட்டிகள் அல்லது குறிப்பாக அந்தச் சாதாரண நபரின் உடல், உடலியல், மரபணு, மனம், பொருளாதாரம், கலாச்சாரம் அல்லது சமூக அடையாளம் குறித்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளை உள்ளடக்கியதாகும். கனடா நாட்டின் தரவுகள் பாதுகாப்பு சட்டங்களின் வரையறுக்கப்பட்டுள்ளபடி தனிப்பட்ட தகவல்களின் வரையறுக்கப்பட்ட சொற்கள் இதில் அடங்கும். தனியுரிமை சட்டம் 1988-இல் (Cth) (ஆஸ்திரேலியா) வரையறுக்கப்பட்டுள்ளபடி தனிப்பட்ட தரவுகளில் 'தனிப்பட்ட தகவல்கள்' அடங்கும்.<br>சீனாவில் வசிப்போரைப் பொறுத்தவரை, தனிப்பட்ட தரவுகளானது பெயரிடப்படாத தகவல்களை உள்ளடக்கியதாக இருக்கும். LTIMindtree, சீனாவில் வசிக்கும் 14 வயதிற்குக் கீழ் உள்ளவர்களிடமிருந்து தனிப்பட்ட தரவுகளைச் சேகரிக்காது. |
| தனிப்பட்ட தகவல்கள் (கலிபோர்னியாவில் வசிப்பவர்களுக்கு மட்டும் பொருந்தும்) (அமெரிக்கச் சட்டத்தின் கீழ்) | கலிபோர்னியாவில் வசிப்பவர்கள் தொடர்புடையதாக ஒரு குறிப்பிட்ட நுகர்வோர் அல்லது வீட்டுடன் நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடர்புடையதாக, அடையாளம் காணக்கூடிய, தொடர்புடையாக இருக்கக்கூடிய, விவரிக்கக்கூடிய தகவல்கள், ஆனால் அவை ஃபெடரல், மாநில அல்லது உள்ளூர் அரசாங்கப் பதிவுகளில் சட்டரீதியாகக் கிடைக்கும்படி செய்யப்படத் தகவல்களை உள்ளடக்கியதாக அல்லது CCPA-உடன் தொடர்புடையதாக வரையறுக்கப்பட்ட சொற்களான "அடையாளம் நீக்கப்பட்டது" அல்லது "தொகுக்கப்பட்ட வாடிக்கையாளர் தகவல்களை" உள்ளடக்கியதாக இருக்கக் கூடாது. LTIMindtree, கலிபோர்னியாவில் வசிக்கும் 16 வயதிற்குக் கீழ் உள்ளவர்களிடமிருந்து தனிப்பட்ட தரவுகளைச் சேகரிக்காது. |

<table>
<tr>
<td rowspan="2">இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகள் (GDPR-இன் கீழ்த் தனிப்பட்ட தரவுகளின் குறிப்பிட்ட வகைகளை உள்ளடக்கியது)</td>
<td colspan="5">சட்டப்பிரிவு 9(1) GDPR தொடர்புடையதாக, தனிப்பட்ட தரவுகளின் குறிப்பிட்ட வகைகள் இனத்தை, அல்லது அரசியல் கருத்துகளை, அல்லது மதம் சார்ந்த அல்லது தத்துவம் சார்ந்த நம்பிக்கைகள், அல்லது வர்த்தக ஒன்றியத்தின் உறுப்பினருரிமையை வெளிப்படுத்தும் தனிப்பட்ட தரவுகளின், அல்லது ஒரு சாதாரண நபரைத் தனித்துவமாக அடையாளம் காணும் நோக்கத்திற்காக மரபணு தரவுகள், பயோமெட்ரிக் தரவுகளைச் செயலாக்கம் செய்தல், அல்லது ஆரோக்கியம் தொடர்புடைய தரவுகள் அல்லது ஒரு சாதாரண நபரின் பாலியல் வாழ்க்கை அல்லது பாலியல் சார் நோக்குநிலை தொடர்புடைய தரவுகளைக் குறிக்கிறது. தனியுரிமை சட்டம் 1988-இல் (Cth) (ஆஸ்திரேலியா) வரையறுக்கப்பட்டுள்ளபடி இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகளில் 'இரகசியம் காக்கப்பட வேண்டிய தகவல்கள்' அடங்கும். .</td>
</tr>
<tr>
<td>மெக்ஸிகோவுக்கு மட்டும்: முன்பு கூறப்பட்டுள்ளவற்றுடன் சேர்த்து, தரவுக்குரியவரின் வாழ்க்கையின் மிகவும் தனிப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த தனிப்பட்ட தரவுகளின் மற்ற எதாவது வகைகள், அல்லது யாருடைய தவறான பயன்பாடு பாகுபாட்டிற்கு வழிவகுக்கும் அல்லது தரவுக்குரியவர்களுக்குக் கடுமையான ஆபத்தை ஏற்படுத்தக்கூடுமோ அவை இரகசியம் காக்கப்பட வேண்டிய தரவுகளாகவும் கருதப்படும்.</td>
<td>சுவிட்சர்லாந்திற்கு மட்டும்: "ஒரு சாதாரண நபரின் பாலியல் சார்ந்த வாழ்க்கை மற்றும் பாலியல் சார்ந்த நோக்குநிலை" என்பதின் வரையறையானது நெருங்கிய உறவு (பாலியல் சார்ந்த வாழ்க்கை/நோக்குநிலைக்கு பதிலாக), சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள், நிர்வாகம் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகம் அல்லது குற்றவியல் தடைகள் உள்ளிட்டவற்றை உள்ளடக்கியதாகவும் இருக்கும்.</td>
<td>சீனாவில் வசிப்பவர்களுக்கு மட்டும்: முன்பு கூறப்பட்டுள்ள வற்றுடன் சேர்த்து, இந்த சொல்லானது பயோமெட்ரிக் அடையாளம், நிதிசார் கணக்குகள், தனிப்பட்ட இருப்பிடங்கள் மற்றும் 14 வயதிற்குக் கீழ் உள்ள சிறுவர்களின் தனிப்பட்ட தகவல்கள் போன்ற ஒரு சாதாரண நபரின் தனிப்பட்ட கண்ணியத்தை அல்லது தனிப்பட்ட அல்லது சொத்து பாதுகாப்பை எளிதில் பாதிக்கக்கூடிய வகையில் கசிய விடப்படும் அல்லது சட்ட விரோதமாகப் பயன்படுத்தப்படும் மற்ற தனிப்பட்ட தரவுகளை உள்ளடக்கியதாகவும் இருக்கும்.</td>
<td>கலிபோர்னியாவில் வசிப்பவர்களைப் பொறுத்தவரை, முன்பு கூறப்பட்டுள்ள வற்றுடன் சேர்த்து, இந்தச் சொல்லானது அரசு அடையாள எண்கள், நிதிசார் எண்கள் அல்லது நிதிசார் கணக்குகளை அணுகுவதற்கான கடவுச்சொற்கள், துல்லியமான இருப்பிடத் தகவல் மற்றும் LTIMindtree சார்ந்ததல்லாத தகவல்தொடர்புகளின் உள்ளடக்கங்கள் உள்ளிட்டவற்றை உள்ளடக்கியதாகவும் இருக்கும்.</td>
<td>டென்மார்க்கில் மட்டும்:<br><br>சமூகப் பாதுகாப்பு எண்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பான தகவல்கள் GDPR-இன் கீழ் இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தகவல்களாகக் கருதப்படாது, ஆனால் அதன் சொந்தத் தகவல் வகையாக அமையும். இதைச் செயலாக்கம் செய்வதற்கு டேனிஷ் நாட்டுத் தரவுகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ்க் குறிப்பிட்ட சட்ட அடிப்ப</td>
</tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | டை தேவை. |
| செயல்முறை, செயல்முறைகள், செயலாக்கப்பட்டது அல்லது செயலாக்கம் செய்தல் | தனிப்பட்ட தரவுகளில் அல்லது தனிப்பட்ட தகவல்களில், அல்லது தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்களின் தொகுப்புகளில், தானியங்கு முறையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் செய்யப்படும் சேகரிப்பு, பதிவு செய்தல், ஒழுங்கமைத்தல், கட்டமைத்தல், சேமித்து வைத்தல், தகவமைத்தல் அல்லது மாற்றியமைத்தல், மீட்டெடுத்தல், ஆலோசனை செய்தல், பயன்படுத்துதல், பரிமாற்றம் மூலம் வெளிப்படுத்துதல், பரப்புதல் அல்லது கிடைக்கும்படி செய்தல், சீரமைப்பு அல்லது சேர்க்கை, கட்டுப்பாடு, நீக்குதல் அல்லது அழித்தல் போன்ற எதாவது அல்லது செயல்பாடுகளின் தொகுப்பு என்பது இதன் பொருள் ஆகும். | | | | |
| ஒப்புதல் | தரவுக்குரியவர்களுடன் தொடர்புடைய தனிப்பட்ட தரவுகள், தனிப்பட்ட தகவல்கள் மற்றும்/அல்லது இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்கம் செய்வதற்கான ஒப்புதலைக் குறிக்கும் ஒரு அறிக்கை அல்லது ஒரு தெளிவான உறுதியான நடவடிக்கை மூலம் அவர்களின் தனிப்பட்ட தரவுகள், தனிப்பட்ட தகவல்கள் மற்றும்/அல்லது இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்கம் செய்வதற்காகத் தரவுக்குரியவர்களின் சுதந்திரமான, குறிப்பான, தெரிவிக்கப்பட்ட மற்றும் நேரடியான பொருள் தரும் ஒப்புதல் என்பது இதன் பொருள் ஆகும். | | | | |
| தரவுக்குரியவர் | என்பது தனிப்பட்ட தரவுகளுடன் தொடர்புடைய ஒரு குறிப்பிட்ட சாதாரண நபர் ஆகும் (அதாவது அடையாளம் காணப்பட்ட அல்லது அடையாளம் காணக்கூடிய சாதாரண நபர்) மனநலக் குறைபாடுகள் உள்ள சிறார்கள்/ தனிநபர்கள் என்றால், சட்டரீதியான பிரதிநிதியால் அல்லது பெற்றோருக்கான பொறுப்பில் உள்ளவர்களால் (பெற்றோர்/ பொறுப்பாளர்) தரவுக்குரியவர் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவார்.<br>இந்தக் கொள்கையின் தெளிவுக்காக, "தரவுக்குரியவர்" என்பதன் பொருள் LTIMindtree-இன் தற்போதைய மற்றும் முன்னால் பணியாளர்கள், வருங்காலத்தில் பணிக்கு விண்ணப்பிப்பவர்கள், தற்போதைய, வருங்கால மற்றும் முன்னால் வாடிக்கையாளர், தற்போதைய மற்றும் முன்னால் கூட்டாளி/விற்பனையாளர், வலைதளத்தைப் பார்வையிடுபவர்கள், துணை ஒப்பந்ததாரர்கள் மற்றும் வருகையாளர்கள்.<br>LTIMindtree, குறிப்பிட்ட சூழ்நிலைகளைத் தவிர 18 வயதிற்குக் கீழ் உள்ள தரவுக்குரியவர்களிடமிருந்து தனிப்பட்ட தரவுகளை/ தனிப்பட்ட தகவல்களை மற்றும் இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகளைப் பொதுவாகச் செயலாக்கம் செய்யாது (பிரிவு 8-ஐ பார்க்கவும்).<br>CCPA-வுக்காக, தரவுக்குரியவர் என்பது கலிபோர்னியாவில் வசிப்பவர்களையும் உள்ளடக்கியதாக இருக்கலாம்.<br>சீனாவில் வசிப்போரைப் பொறுத்தவரை, LTIMindtree, சீனாவில் வசிக்கும் 14 வயதிற்குக் கீழ் உள்ளவர்களிடமிருந்து தனிப்பட்ட தரவுகளைச் சேகரிக்காது. | | | | |
| தரவு கட்டுப்பாட்டாளர் | தனியாக அல்லது மற்றவர்களுடன் கூட்டாக, தனிப்பட்ட தரவுகளின் செயலாக்கத்திற்கான நோக்கங்கள் மற்றும் வழிமுறைகளைத் தீர்மானிக்கும் ஒரு சாதாரண அல்லது சட்டம் சார்ந்த நபர், பொது அதிகார அமைப்பு, முகமை அல்லது பிற அமைப்புகள் என்பது இதன் பொருள் ஆகும்; இதில் அத்தகைய செயலாக்கத்தின் நோக்கங்கள் மற்றும் வழிமுறைகளானது தேசிய அல்லது பொருந்தும் சட்டங்களால், கட்டுப்பாட்டாளரால் தீர்மானிக்கப்படும் அல்லது தேசிய அல்லது பொருந்தும் சட்டங்களால் அதன் முன்மொழிவுக்கான குறிப்பிட்ட வரன்முறைகள் வழங்கப்படும். | | | | |
| தரவு செயலாக்கி | என்பது ஒரு சாதாரண அல்லது சட்டம் சார்ந்த நபர், பொது அதிகார அமைப்பு, முகமை அல்லது தரவு கட்டுப்பாட்டாளரின் சார்பாகத் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்கம் செய்யும் பிற அமைப்புகளைக் குறிக்கிறது | | | | |
| மூன்றாம் தரப்பு | தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்கள் தொடர்புடையதாக இதன் பொருள், தரவுக்குரியவர், கட்டுப்பாட்டாளர், செயலாக்குனர் மற்றும் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்கம் செய்யும் அங்கீகாரம் பெற்ற தரவு கட்டுப்பாட்டாளர் மற்றும் தரவு செயலாக்குனரின் நேரடி அதிகாரத்தின் கீழ் உள்ளவர்களைத் தவிர ஒரு சாதாரண அல்லது சட்டம் சார்ந்த நபர், பொது அதிகார அமைப்பு, முகமை அல்லது அமைப்பு ஆகும்; | | | | |

| | |
|---|---|
| "விற்பனை செய்,", "விற்பனை செய்தல்," "விற்பனை," அல்லது "விற்பனை செய்யப்பட்டது," | பணம் அல்லது பிற மதிப்புமிக்க பொருளுக்காக, கலப்பு மற்றொரு தொழில் நிறுவனத்திடம் அல்லது ஒரு மூன்றாம் தரப்பிடம் வாடிக்கையாளரின் தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்களானது தொழில் நிறுவனத்தால் விற்பனை செய்யப்படுவது, வாடகைக்கு வழங்கப்படுவது, வெளியிடப்படுவது, வெளிப்படுத்தப்படுவது, பரப்புவது, கிடைக்கும்படி செய்வது, அனுப்புவது, அல்லது வாய்வழியாக, எழுத்துப்பூர்வமாக அல்லது மின்னணு அல்லது பிற வழிகளில் தொடர்புகொள்தல் என்பது இதன் பொருள் ஆகும். |
| "பகிரவும்" அல்லது "பகிர்தல்" (கலிபோர்னியாவில் வசிப்பவர்களுக்கு) | பணம் எதுவும் பரிமாற்றம் செய்யப்படாமல் தொழிலின் நலனுக்காகக் கலப்பு சூழல் நடத்தை சார்ந்த விளம்பரத்திற்காகத் தொழில் நிறுவனம் மற்றும் மூன்றாம் தரப்பு இடையிலான பரிவர்த்தனைகள் உட்பட, பணம் அல்லது பிற மதிப்புமிக்க பொருளுக்காகவோ அல்லது இல்லாமலோ, கலப்பு சூழல் நடத்தை சார்ந்த விளம்பரத்திற்காக ஒரு மூன்றாம் தரப்பிடம் வாடிக்கையாளரின் தனிப்பட்ட தகவல்களானது தொழில் நிறுவனத்தால் பகிரப்படுவது, வாடகைக்கு வழங்கப்படுவது, வெளியிடப்படுவது, வெளிப்படுத்தப்படுவது, பரப்புவது, கிடைக்கும்படி செய்வது, அனுப்புவது, அல்லது வாய்வழியாக, எழுத்துப்பூர்வமாக அல்லது மின்னணு அல்லது பிற வழிகளில் தொடர்புகொள்தல் என்பது இதன் பொருள் ஆகும். |

மேலே வரையறுக்கப்படாத சொற்கள் குறித்து அறிந்துகொள்ள www.LTIMindtree.com-இல் உள்ள உலகளாவிய தரவு தனியுரிமை கொள்கையைப் பார்க்கவும். மற்ற அனைத்துச் சொற்களுக்கும் குறிப்பிட்ட சட்ட எல்லைக்குத் தொடர்புடைய தரவு தனியுரிமை சட்டங்களையும் பார்க்கவும்.

## சேகரிக்கப்படும் தனிப்பட்ட தரவுகள் என்ன

பிரிவு 6-இன் படி சட்டரீதியாக நியாயப்படுத்தப்பட்ட மற்றும்/அல்லது பொருந்தும் உள்ளூர் சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அவசியமான தரவுகளை மட்டும் LTIMindtree உங்களிடமிருந்து நேரடியாகச் சேகரிக்கும். வழக்கமாகச் சேகரிக்கப்பட்டுச் செயலாக்கம் செய்யப்படும் தனிப்பட்ட தரவுகளின் வகைகள்:

- பெயர், முகவரி, தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் தொடர்பு விவரங்கள்;
- உங்களின் எதாவது ஒரு அரசாங்க அடையாள அட்டை (பொருந்துமென்றால்)
- வளாகங்களுக்குள் நுழையும் மற்றும் வெளியேறும் நேரம்.
- தற்காலிக அணுகல் அட்டையை வழங்குவதற்குத் தேவைப்பட்டால் புகைப்படம் பெறப்படும்.
- எங்கள் சொத்தின் பாதுகாப்பிற்காகவும், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காகவும், LTIMindtree வளாகங்களில் உங்களின் CCTV காட்சி பெறப்படும்.
- எங்களின் Wi-Fi நெட்வொர்க்கில் நீங்கள் இணையும்போது நெட்வொர்க் பயன்பாட்டு விவரங்கள் பெறப்படும்
- 18 வயதிற்குக் கீழ் உள்ளவர்கள் உங்களுடன் வரும்போது அல்லது உங்களைப் பார்க்க வரும்போது அவர்களின் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் செயலாக்கம் செய்யக்கூடும். அத்தகைய சந்தர்ப்பங்களில் உங்களால் உள்ளீடு செய்யப்படும் தகவல்கள் விருப்பத்துடன் உங்களால் உள்ளீடு செய்யப்படுகிறது மற்றும் உள்ளீடு செய்யப்படும் தகவல்களின் சரித்தன்மைக்கு நீங்கள்தான் பொறுப்பு. குழந்தைகளின் தகவல்களை உள்ளிடாமல் இருப்பதற்கான விருப்பத்தேர்வு உங்களுக்கு உண்டு. குழந்தைகளின் தகவல்களை உள்ளிடாமல் இருக்க நீங்கள் தேர்வு செய்தால், ஒரு வருகையாளராக எங்களின் வளாகங்களை அணுக LTIMindtree உங்களை அனுமதிக்காது என்பதை நினைவில் கொள்ளவும்.
- இரகசியம் காக்கப்பட வேண்டிய எந்தவொரு தகவல்களும் எங்களால் சேகரிக்கப்படாது.

இந்தத் தகவல்கள் எங்களால் உங்களிடமிருந்து நேரடியாகச் சேகரிக்கப்படும்.

## உங்களின் தனிப்பட்ட தரவுகள் மற்றும் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் எப்படிச் சேகரிக்கிறோம்

வரவேற்பு அறையில் பராமரிக்கப்படும் வருகையாளர் பதிவேடுகளின் மூலம் வருகையாளர்கள் குறித்த தனிப்பட்ட தரவுகளை நேரடியாக வருகையாளர்களிடமிருந்தே நாங்கள் சேகரிக்கிறோம். CCTV காட்சி மற்றும் தொடர்புடைய நெட்வொர்க் பயன்பாடு போன்ற விவரங்கள் மறைமுகமாகச் சேகரிக்கப்படுகின்றன. தேவைப்பட்டால், தொழில் செய்யும்போது கூடுதல் தனிப்பட்ட தரவுகளை நாங்கள் சேகரிக்கக்கூடும். வருகையாளர் உள்நுழைதல் செயல்முறையின் ஒரு பகுதியாகச் சேகரிக்கப்பட்ட தரவுகள் அனைத்தும் அல்லது சேகரிக்கப்பட்ட கூடுதல் தரவுகள், எதாவது இருந்தால், அலுவலகப் பாதுகாப்பு நோக்கங்களுக்காகவும், எங்களின் சட்டக் கடமைகள் அல்லது சட்டப்படியான நலன்களுடன் இணங்குவதற்காகவும் பயன்படுத்தப்படும் மற்றும் சேமித்து வைக்கப்படும்.

## செயலாக்கத்தின் நோக்கம் மற்றும் சட்ட அடிப்படை

LTIMindtree-இல், LTIMindtree-இன் வளாகங்களுக்குள் நீங்கள் வருகை தரும் நோக்கங்களுக்காக உங்களின் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் வைத்துக்கொண்டு செயலாக்கம் செய்ய வேண்டும். சட்டப்படியான நலனின் அடிப்படையில், பொருந்தும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, உங்களின் ஒப்புதலின் பேரில் உங்களின் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் பயன்படுத்தலாம். உங்களின் ஒப்புதலில், எங்களின் நிறுவனத்திற்குள் பாதுகாப்பு நோக்கங்களுக்காக உங்களின் தனிப்பட்ட தகவல்களை மதிப்பீடு செய்வதற்கான ஒப்புதலும் அடங்கும். பின்வரும் வழிகளில் உங்களின் தனிப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்படலாம்:

- பாதுகாப்பு நோக்கங்களுக்காக, உங்களிடம் அல்லது சட்ட அமலாக்க அதிகாரிகளுடன் உரையாடுதல்,
- வளாகங்கள், Wi-Fi, சிற்றுண்டிகள் முதலியனவற்றுக்கான அணுகலை வழங்குவது போன்ற நிர்வாகம் மற்றும் உபசரிப்பு நோக்கத்திற்காக
- பொருந்தும் சட்டத்துடன் இணங்கவேண்டும் என்பது உட்பட எங்களின் வளாகங்களின் பாதுகாப்பைக் கண்காணித்தல்
- தணிக்கை இணக்கம் - எங்களின் தணிக்கை செயல்முறைகளின் ஒரு பகுதியாக நாங்கள் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்கம் செய்யக்கூடும் மற்றும் அவ்வப்போது மூன்றாம் தரப்பு தணிக்கையாளர்களை ஈடுபடுத்தக்கூடும். பொருந்தும் சட்டங்களுக்கு இணங்குவதற்காக, எங்களின் சட்ட உரிமைகளைப் பாதுகாக்க அல்லது பயன்படுத்த மற்றும் முறையான தொழில் நலன்களுக்காக அத்தகைய தணிக்கைகளின்போது முற்றிலும் அவசியமான தனிப்பட்ட தரவுகள் மட்டும் செயலாக்கம் செய்யப்படுவதை நாங்கள் உறுதி செய்துள்ளோம்.

தொடர்பில்லாத நோக்கத்திற்காக நாங்கள் உங்களின் தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்த வேண்டுமென்றால், நாங்கள் உங்களுக்குத் தெரிவிப்போம் மற்றும் தேவையற்ற தாமதமின்றி அவ்வாறு செய்ய அனுமதிக்கும் சட்ட அடிப்படையை நாங்கள் விளக்குவோம்.

## இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகளின் செயலாக்கம்

இரகசியம் காக்கப்பட வேண்டிய எந்தவொரு தகவல்களும் எங்களால் சேகரிக்கப்படாது.

## 18 வயதிற்குக் கீழ் உள்ள தனிநபர்களின் தனிப்பட்ட தரவுகள்

18 வயதிற்குக் கீழ் உள்ளவர்கள் உங்களுடன் வரும்போது அல்லது உங்களைப் பார்க்க வரும்போது அவர்களின் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் செயலாக்கம் செய்யக்கூடும். அத்தகைய தனிநபர்களின் தனிப்பட்ட தரவுகள் அல்லது இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகளை நாங்கள் செயலாக்கம் செய்ய வேண்டியிருந்தால், சட்டப்பூர்வமான பொறுப்பாளர்களிடமிருந்தும், சிறார்களின் வயது மற்றும் முதிர்ச்சியின் அடிப்படையில் ஒப்புதல் வழங்கும் திறன் அவர்களுக்கு இருந்தால் அவர்களிடமிருந்தும் வெளிப்படையான ஒப்புதலைப் பெற்ற பிறகுதான் நாங்கள் அதைச் செய்வோம். 18 வயதிற்குக் கீழ்

உள்ளவர்களைக் குறித்த தனிப்பட்ட தரவுகளை அல்லது இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகளை நாங்கள் தற்செயலாக அவர்களிடமிருந்து நேரடியாகப் பெற்றிருந்தால், இந்தக் கொள்கையில் வழங்கப்பட்டுள்ள தொடர்பு விவரங்களில் (கீழே உள்ள பிரிவு 19) எங்களிடம் உடனடியாகத் தெரிவிக்கவும் மற்றும் அதன்படி நாங்கள் அத்தகைய தகவல்களை நீக்குவோம்.

அத்தகைய சந்தர்ப்பங்களில் உங்களால் உள்ளீடு செய்யப்படும் தகவல்கள் விருப்பத்துடன் உங்களால் உள்ளீடு செய்யப்படுகிறது மற்றும் உள்ளீடு செய்யப்படும் தகவல்களின் சரித்தன்மைக்கு நீங்கள்தான் பொறுப்பு. குழந்தைகளின் தகவல்களை உள்ளிடாமல் இருப்பதற்கான விருப்பத்தேர்வு உங்களுக்கு உண்டு. குழந்தைகளின் தகவல்களை உள்ளிடாமல் இருக்க நீங்கள் தேர்வு செய்தால், ஒரு வருகையாளராக எங்களின் வளாகங்களை அணுக LTIMindtree உங்களை அனுமதிக்காது என்பதை நினைவில் கொள்ளவும்.

## உங்களின் தனிப்பட்ட தரவுகளை நாங்கள் யாரிடம் பகிரக்கூடும் (தனிப்பட்ட தரவுகளின் பெறுநர்கள்/வகைகள்)

- எங்களின் தொழிலை நடத்தவும் (பாதுகாப்பு முகமைகள், கட்டிட ஆபரேட்டர்கள், நிர்வாகம் மற்றும் வளாகங்களின் செயல்பாடு, வரவேற்பு பணி), எங்களின் தணிக்கைகளுக்கும் (மூன்றாம் தரப்பு தணிக்கையாளர்கள்) உதவுவதற்காகக் குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றாம் தரப்பினரை நாங்கள் பயன்படுத்தக்கூடும்.
- பல சர்வதேச நாடுகளில் எங்களுக்கு அலுவலகங்கள் உண்டு மற்றும் நாங்கள் செயல்படுகிறோம், மேலும் தொழில் மற்றும் நிர்வாக நோக்கங்களுக்காக எங்களின் குழும நிறுவனங்களுக்கு இடையில், நிறுவனத்திற்குள் கையொப்பமிடப்படும் வழக்கமான உடன்படிக்கை சார்ந்த சட்ட உட்கூறுகள் உட்படத் தரவு செயலாக்க ஒப்பந்தங்கள் மூலமாக நாங்கள் தகவல்களைப் பகிர்கிறோம். ஸ்கிரீனிங் மற்றும் நேர்காணல் நோக்கங்களுக்காக எங்களின் உள் ஊழியர்களிடம் உங்களின் தகவல்கள் பகிரப்படலாம். Larsen and Toubro-இன் நிறுவனங்கள் மற்றும் கிளைகளின் பட்டியலைப் பார்ப்பதற்கு இங்கே க்ளிக் செய்யவும்.
- தேவைப்படும் அல்லது சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட இடத்தில், ஒழுங்குமுறையாளர்கள் மற்றும் சட்ட அமலாக்க முகமைகள் போன்ற பிறருக்குத் தகவல்கள் வழங்கப்படும்.

## தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்களின் தக்கவைப்பு மற்றும் நீக்கம்

எவ்வளவு காலத்திற்கு நாங்கள் உங்களின் தனிப்பட்ட தரவுகளை/ தனிப்பட்ட தகவல்களை வைத்திருப்போம் என்பது முக்கியமாகப் பின்வருவனவற்றைச் சார்ந்து மாறும்:

- தனிப்பட்ட தரவுகளை/ தனிப்பட்ட தகவல்களைப் பயன்படுத்துவதற்காக இந்தக் கொள்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள நோக்கங்கள் - தொடர்புடைய நோக்கத்திற்குத் தேவைப்படும் வரை தகவல்களை நாங்கள் வைத்திருக்க வேண்டும்; மற்றும்
- சட்டக் கடமைகள் - உங்களின் தனிப்பட்ட தரவுகளை/ தனிப்பட்ட தகவல்களை நாங்கள் வைத்திருப்பதற்கான குறைந்தபட்சக் கால அளவை சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகள் வழங்கியுள்ளன;
- தனிப்பட்ட தரவுகளை/ தனிப்பட்ட தகவல்களை அகற்றுவதை நாங்கள் மிகுந்த கவனத்துடன் மேற்கொள்வோம் மற்றும் தரவுகள் அகற்றத்தை நிர்வகிக்கும் அதன் உள் கொள்கைகளால் விவரிக்கப்பட்டுள்ளபடி உரிய தரவு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இணங்க நிர்வகிக்கப்படும்;
- தனிப்பட்ட தரவுகள்/ தனிப்பட்ட தகவல்கள், LTIMindtree-யின் தக்கவைத்தல் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடியும் பொருந்தும் சட்டத்தின்படியும் அவை உண்மையாகச் சேகரிக்கப்பட்ட நோக்கங்களுக்காகத் தேவையான காலத்திற்கு மட்டும் செயலாக்கம் செய்யப்படும்.

## எல்லை கடந்து அனுப்புதல்

*நாங்கள் Larsen and Toubro குழும நிறுவனங்களின் (www.larsentoubro.com) ஒரு அங்கமாகும், இது ஒரு சர்வதேசக் குழும நிறுவனங்களாகும், மேலும் அதனால், உங்களுடன் தொடர்புடைய தனிப்பட்ட தரவுகளை / தனிப்பட்ட தகவல்களை LTIMindtree செயல்படும் நாடுகளுக்கு, குறிப்பாக இந்தியாவுக்கு அனுப்பலாம். மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காகத் தனிப்பட்ட தரவுகளை எங்களின் குழும இணை நிறுவனங்கள் மற்றும் தரவு மையங்களுக்கு இடையில் நாங்கள் அனுப்பக்கூடும்.*

*எங்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்க இந்தத் தரவுகளை அனுப்புவது அவசியமாகும். தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் எங்களின் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு சப்ளையர்களிடம், அல்லது LTIMindtree வாடிக்கையாளர்களிடம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழில் பார்ட்னர்களிடமும் தனிப்பட்ட தரவுகளை நாங்கள் அனுப்பலாம்.*

*உங்களின் சட்ட எல்லைக்கு வெளியே உங்களின் தனிப்பட்ட தரவுகளை/ தனிப்பட்ட தகவல்களை/ இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தகவல்களை நாங்கள் அனுப்பும்போது, அவை பாதுகாக்கப்படுவதையும், பொருந்தும் தரவுகள் தனியுரிமை சட்டங்களுக்கு இணங்கும் வகையில் அனுப்பப்படுவதையும் நாங்கள் உறுதி செய்வோம்.*

*எங்களின் குழும நிறுவனங்கள், மூன்றாம் தரப்பினர், EEA-க்கு வெளியே உள்ள சப்ளையர்கள் உள்ளிட்டோருக்கு அனுப்பும்போது, நாங்கள் வழக்கமான ஒடன்படிக்கை சார்ந்த சட்ட உட்கூறுகளை அல்லது அனுப்புபதற்கு ஏற்ற கருவியைப் பயன்படுத்துவோம். பயன்படுத்தப்படும் கருவி/முறை குறித்த கூடுதல் விவரங்களை நீங்கள் பெற விரும்பினால் dataprotectionoffice@ltimindtree.com என்ற மின்னஞ்சல் முகவரியில் நீங்கள் எங்களைத் தொடர்புகொள்ளலாம்.*

*மற்ற சட்ட எல்லைகளுக்கு வெளியே அனுப்புவதற்கு, பொருத்தமான பொறுப்புகள் வெளிப்படுத்தப்படுவதுடன் அதன் தரவு இறக்குமதி கிளை மற்றும் அதன் தரவு ஏற்றுமதி கிளை இடையே கையொப்பமிடப்பட்ட பொருந்தும் தனியுரிமை சட்டங்களுக்கு இணங்கத் தொடர்புடைய தரவு செயலாக்க ஒப்பந்தங்கள் இருப்பதை நாங்கள் உறுதி செய்வோம்.*

*சட்ட எல்லைகளுக்கு இடையே தரவுகள் அனுப்பப்படுவது தொடர்பான விவரங்களுக்கு, இங்கே அணுகக்கூடிய உலகளாவிய தரவு தனியுரிமை கொள்கையைப் பார்க்கவும்.*

## தனிப்பட்ட தரவுகள்/ தனிப்பட்ட தகவல்கள்/ இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு

*பொருந்தும் தரவு தனியுரிமை சட்டங்களின் கீழ் எங்களின் தரவு பாதுகாப்பு கடமைகளுடன் இணங்க, உங்களின் தனிப்பட்ட தரவுகள்/ தனிப்பட்ட தகவல்கள் மற்றும் இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தகவல்கள் மற்றும் PHI உள்ளிட்டவற்றின் பாதுகாப்பை உறுதி செய்ய, பொருந்து தொழில்துறை தரநிலைகள், செயல்படுத்துவதற்கான செலவுகள் மற்றும் இயல்பு, சூழல் மற்றும் செயலாக்கத்தின் நோக்கங்கள் அத்துடன் உங்கள் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கான பல்வேறு சாத்தியக்கூறுகள் மற்றும் தீவிரத்தன்மைக்கு ஏற்படும் ஆபத்து உள்ளிட்டவற்றைக் கருத்தில் கொண்டு, பின்வரும் நேரடி (ஃபிசிக்கல்), தொழில்நுட்பம் மற்றும் நிறுவனம் சார்ந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்கிறோம்:*

- *தரவுகளின் தன்மை மற்றும் மனிதனின் செயலால் அல்லது நேரடி (ஃபிசிக்கல்) அல்லது இயற்கை சுற்றுச்சூழலால் அவற்றுக்கு ஆபத்து ஏற்பட்டதா என்பதைப் பொறுத்து, அவற்றின் திருத்தம், சேதம், இழப்பு, அங்கீகரிக்கப்படாத செயலாக்கம் அல்லது அணுகல் உள்ளிட்டவற்றைத் தடுப்பதை உள்ளடக்கியதாக இருக்கும்.*

- அதன் உள் தகவல் தொழில்நுட்பப் பிரிவுடன் ஆலோசனை செய்து எங்களின் உடன்படிக்கை சார்ந்த மற்றும் சட்டரீதியான தேவைகளின்படி பாதுகாப்பு அம்சங்களுடன் நாங்கள் இணங்கலாம்.
- தரவு தனியுரிமை மற்றும் தலைமை தகவல் பாதுகாப்பு அலுவலரின் அலுவலகமானது, தனிப்பட்ட தரவுகள், தனிப்பட்ட தகவல்கள் மற்றும் இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்காகச் செயல்படுத்தப்பட்டுள்ள நடவடிக்கைகளைத் தவறாமல் மதிப்பாய்வு செய்யலாம் மற்றும் தேவைப்படும் இடத்தில் அவற்றைப் புதுப்பிக்கலாம்.
- அனைத்துத் துணை ஒப்பந்ததாரர்களுக்கும் கட்டாயத் தனியுரிமை பயிற்சி வழங்கப்படலாம் (எ.கா., மென்பொருள் உருவாக்கத்தில் தனியுரிமையைச் சேர்க்கும் பயிற்சி). அனைத்துத் துணை ஒப்பந்ததாரர்களும் LTIMindtree உடன் அவர்கள் சேரும் தேதியில் அல்லது அதற்கு முன் கூடுதல் இரகசியத்தன்மையைக் காப்பதற்கான ஒப்பந்தங்கள் மற்றும் வெளிப்படுத்தாமல் இருப்பதற்கான ஒப்பந்தங்களில் கையொப்பமிடலாம்.
- நாங்கள் சேகரிக்கும், சேமித்து வைக்கும், செயலாக்கம் செய்யும் மற்றும் வெளிப்படுத்தும் தனிப்பட்ட தரவுகள் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதற்காக நாங்கள் பின்வரும் பாதுகாப்பு அம்சங்களைச் செயல்படுத்தியுள்ளோம்:
- நேரடி(ஃபிசிக்கல்) பாதுகாப்பு கட்டுப்பாடுகள்
- வளாகத்தைச் சுற்றிப் பாதுகாப்பு அமைப்பு, HD ஆக்ஸஸ் ரீடர், தரவு மையம், வீடியோ கண்காணிப்பு
- IT உள்கட்டமைப்பு கட்டுப்பாடுகள்
- என்க்ரிப்ஷன், DLP, டேட்டா மாஸ்கிங், கட்டுப்படுத்தப்பட்ட போர்ட்டபிள் போர்ட்கள், அணுகல் கட்டுப்பாடு, அங்கீகரிக்கப்படாத மென்பொருள் சரிபார்ப்பு, தரவுகள் அழிப்பு, கணினி சுகாதார நடவடிக்கைகள், கண்காணிப்பு, பயனர் அணுகல் மேலாண்மை, பேட் மேலாண்மை, பாதிப்பு ஏற்படக்கூடிய தன்மை மேலாண்மை.

தரவு தனியுரிமை இணக்கத்தில் ஏற்படும் விலக்குகளை உடனடியாகத் தரவு தனியுரிமை அலுவலகத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ள தரவு பாதுகாப்பு அலுவலரிடமும் தெரிவிப்பதை உறுதி செய்யும் இன்சிடண்ட் மற்றும் ப்ரீச் மேனேஜ்மெண்ட்.

## கண்காணித்தல்

எங்களின் கணினிகள் மற்றும் வளாகங்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள எங்களுக்கு உதவுவதற்கான தொழில்துறை தரத்திலான பாதுகாப்பு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்கின்றோம். வழக்கமாக அல்லது எப்போதாவது (பொருந்துவதற்கேற்ப) தனிப்பட்ட தரவுகளின் செயலாக்கத்திற்காகச் செயல்படுத்தப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள், பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்:

- மின்னஞ்சல் பாதுகாப்பு - பெறப்படும் மற்றும் அனுப்பப்படும் மின்னஞ்சல்களில் அச்சுறுத்தல்களுக்கான வாய்ப்புள்ளதா என்று தானாக ஸ்கேன் செய்யும் மின்னஞ்சல் பாதுகாப்பு நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்கிறோம். இணையதள ஏமாற்ற (ஃபிஷிங்) மின்னஞ்சல்கள் அல்லது மால்வேர்கள் போன்ற அச்சுறுத்தல்கள் குறித்து IT-இன் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்படலாம்.

- செயல்பாட்டு பதிவுகள் - தரவுகளை யார் அணுகுகிறார்கள் மற்றும் யார் திருத்தங்களைச் செய்கிறார்கள் என்பதைப் பின்தொடர்வதற்காக எங்களின் தானியங்கி அமைப்புகளின் ஒரு பகுதியாக எங்களிடம் தணிக்கை தடம் காணும் திறன்களும் உள்ளது. இதன் பொருள், லாகின் செய்வதற்கான கடவுச்சொற்கள், வலைதளங்கள் மற்றும் செயலிகள் உள்ளிட்டவற்றின் உங்கள் பயன்பாடு குறித்த தகவல்களை நாங்கள் அணுகலாம் என்பதாகும், எதவாது பிரச்சனையின்போது அவை பார்க்கப்படும்.

- *CCTV - எங்களின் வளாகங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்காக நாங்கள் CCTV-ஐ இயக்குகிறோம். CCTV செயல்பாட்டின் ஒரு பகுதியாக உங்களின் படங்கள் பதிவு செய்யப்படலாம், எனினும், ஏதேனும் சம்பவம் ஏற்பட்டுள்ள இடங்களில் மட்டும்தான் நாங்கள் உங்களின் படங்களைப் பார்ப்போம். • LTIMindtree-இன் சேவைகள், கருவிகள் மற்றும் இணைக்கத்தை மேம்படுத்த உதவுவதற்காகத் திரட்டப்பட்ட பெயர் தெரியாத கணினி ஸ்கேன்களையும் நாம் மேற்கொள்ளலாம். அத்தகைய எந்தவொரு ஸ்கேனும் LTIMindtree-இன் குறிப்பிட்ட சட்டப்படியான வணிக நலன்களுக்குச் சமமானதாக இருக்கும் மற்றும் பொருந்தும் உள்ளூர் சட்டங்களுடன் பொருந்துபவையாக இருக்கும்.*

## தனிப்பட்ட தரவுகளின் விற்பனை

பணம் சார்ந்த நோக்கங்களுக்காக உங்களின் தனிப்பட்ட தரவுகளை நாங்கள் விற்பனை செய்ய மாட்டோம்.

## நீங்கள் உங்களின் தனிப்பட்ட தரவுகளை வழங்கத் தவறினால்

நீங்கள் இந்தத் தரவுகளை வழங்கவில்லை என்றால்:

- எங்களின் வளாகத்திற்குள் நுழையவும் தேவையான வசதிகளைப் பயன்படுத்தவும் உங்களை எங்களால் அனுமதிக்க முடியாமல் போகலாம்
- சில சந்தர்ப்பங்களில் எங்களின் கடமைகளுக்கு இணங்க முடியாமலே அல்லது உங்களின் பணியாளருடனான எங்களின் உடன்படிக்கை சார்ந்த கடமைகளை நிறைவேற்ற முடியாமலோ போகலாம், அத்தகைய முடிவின் பாதிப்புகள் குறித்து உங்களிடம் நாங்கள் தெரிவிப்போம்.

## தரவுக்குரியவர்களின் உரிமைகள்/எனக்கு என்ன உரிமைகள் உள்ளன?

உங்களின் தனிப்பட்ட தரவுகளையும், தனிப்பட்ட தரவுகளில் செய்யப்படும் செயலாக்க நடவடிக்கைகளையும் அணுகுவதற்குக் கோரும் உரிமை போன்ற, பொருந்தும் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் உங்களின் தனிப்பட்ட தரவுகள் தொடர்பான குறிப்பிட்ட உரிமைகளை நீங்கள் கொண்டிருக்கலாம்.

- உங்களின் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்கம் செய்வது தொடர்பான தகவல்களைப் பெறலாம்
- தனிப்பட்ட தரவுகளையும், தனிப்பட்ட தரவுகளில் செய்யப்படும் செயலாக்க நடவடிக்கைகளையும் அணுகுவதற்குக் கோரிக்கை விடுக்கலாம்.
- உங்களின் தனிப்பட்ட தரவுகள் துல்லியமற்றதாக அல்லது முழுமையற்றதாக இருந்தால் அதைச் சரி செய்யக் கோரிக்கை விடுக்கலாம்.
- குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் உங்களின் தனிப்பட்ட தரவுகளை அழிக்கும்படி கோரிக்கை விடுக்கலாம்.
- குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் உங்களின் தனிப்பட்ட தரவுகளின் செயலாக்கம் கட்டுப்படுத்தப்படும்படி கோரிக்கை விடுக்கலாம்.
- குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் உங்களின் தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்கம் செய்வதை நீங்கள் எதிர்க்கலாம்.
- ஒரு கட்டுப்பாட்டாளராக, குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் உங்களின் தனிப்பட்ட தரவுகளைக் கட்டமைக்கப்பட்ட, பொதுவாகப் பயன்படுத்தப்படும் மற்றும் இயந்திரத்தால் படிக்கக்கூடிய வடிவத்தில் பெறலாம்.
- பொருந்தும் மேற்பார்வை அதிகாரியிடம் புகார் அளிக்கலாம்.
- தானியங்கு செயலாக்கத்தின் (ப்ரொஃபைலிங் உட்பட) அடிப்படையில் மட்டும் ஒரு முடிவுக்கு உட்படாமல் இருக்கலாம் அல்லது எதிர்க்கலாம், அவை சட்டரீதியான விளைவுகளை உண்டாக்கும் அல்லது உங்களைக் குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கக்கூடும் (பொருந்தும் என்றால்).
- உங்களின் (வெளிப்படையான) ஒப்புதலின் அடிப்படையில் செயலாக்கம் செய்யப்படும் இடத்தில், எந்த நேரத்திலும் எங்களைத் தொடர்புகொள்வதன் மூலம் உங்களின் ஒப்புதலை நீங்கள் திரும்பப்பெறலாம்.

©LTIMindtree | சிறப்புரிமை பெற்றது மற்றும் இரகசியமானது 2022

நீங்கள் கூடுதல் விவரங்களைப் பெறவோ அல்லது உங்களின் தனிப்பட்ட தரவுகளில் எதாவது குறிப்பிட்ட திருத்தங்களை மேற்கொள்ளவோ விரும்பினால், dataprotectionoffice@ltimindtree.com என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களின் தரவு பாதுகாப்பு அலுவலரைத் தொடர்புகொள்ளவும்.

உங்களின் தனிப்பட்ட தரவுகளைப் பொறுத்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளைப் பயன்படுத்துவதற்கு, பின்வரும் தகவல்களுடன் dataprotectionoffice@ltimindtree.com என்ற மின்னஞ்சல் முகவரியில் எழுத்துப்பூர்வமாக நீங்கள் கோரிக்கை விடுக்கலாம்:

- முழு பெயர்:
- மின்னஞ்சல் முகவரி:
- நீங்கள் பயன்படுத்த விரும்பும் தரவுக்குரியவர்களின் உரிமை:
- LTIMindtree உடனான உறவு (பணி விண்ணப்பதாரர், மாணவர், வாடிக்கையாளர், ஒப்பந்ததாரர், LTIMindtree-இன் பணியாளர், வலைதளத்தைப் பார்வையிடுபவர், LTIMindtree-க்கு வருகை தருபவர், LTIMindtree-இன் முன்னாள் ஊழியர், LTIMindtree-இன் தரவுக்குரியவரின் சார்பாக, 16 வயதிற்குக் கீழ் உள்ள தரவுக்குரியவரின் சார்பாக)
- குடியிருக்கும் நாடு:
- கோரிக்கை விவரங்கள்:

உங்களின் கோரிக்கையைச் செயலாக்கம் செய்வதன் ஒரு பகுதியாக, உங்களின் அடையாளத்தைச் சரிபார்ப்பதற்காக உங்களைக் குறித்த குறிப்பிட்ட தனிப்பட்ட தரவுகளை நீங்கள் வழங்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். கூடுதலாக, உங்களின் உரிமைகளுக்கு இணங்க, பொருந்தும் சட்டங்களால் அனுமதிக்கப்பட்டால், உங்களின் சார்பாகக் கோரிக்கை விடுப்பதற்காக ஒரு அங்கீகரிக்கப்பட்ட முகவரை நீங்கள் நியமிக்கலாம். உங்களின் கோரிக்கையுடன் இணங்குவதற்காக, அடையாளத்தைச் சரிபார்க்கும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்த மேலே குறிப்பிடப்பட்டுள்ள தனிப்பட்ட தரவுகளும், அத்துடன் உங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவரின் பெயர், மின்னஞ்சல் முகவரி, மற்றும் தொலைபேசி எண்ணும் எங்களுக்குத் தேவைப்படும்.

எங்களின் தளத்தில் எந்தவொரு அதிகாரப்பூர்வக் கோரிக்கையையும் எழுப்புவதற்கு முன் உங்களின் சட்டப்படியான உரிமை(கள்) மற்றும் நலனை(களை) துல்லியமாக மதிப்பிடுவது உங்களை LTIMindtree கேட்டுக்கொள்கிறது.

தரவுக்குரியவரின் உரிமைகள் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு, இங்கே அணுகக்கூடிய உலகளாவிய தரவு தனியுரிமை கொள்கையைப் பார்க்கவும்.

## கலிபோர்னியா தனியுரிமை உரிமைகள்

கலிபோர்னியாவில் வசிப்பவர்களைப் பற்றி தொழில் நிறுவனங்கள் சேகரிக்கும், விற்பனை செய்யும் அல்லது வெளிப்படுத்தும் தனிப்பட்ட தகவல்களின் வகைகள் மற்றும் குறிப்பிட்ட தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்துமாறு கோரும் உரிமையைக் கலிபோர்னியாவில் வசிப்பவர்களுக்கு CCPA வழங்குகிறது, மேலும் கோரிக்கையைச் சரிபார்த்த பிறகு அத்தகைய தகவல்களை எந்தவொரு கட்டணமுமின்றிக் கோரும் கலிபோர்னியாவில் வசிப்பவர்களுக்கு நாங்கள் வழங்கலாம். நாங்கள் அத்தகைய தகவல்களை 12-மாத காலத்தில் இரண்டு முறைக்கு மேல் வழங்கக்கூடாது. CCPA-இன் கீழ், "சேகரிப்பு" என்பது நேரடியாக, மறைமுகமாக அல்லது கலிபோர்னியாவில் வசிப்பவர்களைக் கூர்ந்து நோக்குவதன் மூலம் வாங்கப்பட்ட, வாடகைக்கு வாங்கப்பட்ட, சேகரிக்கப்பட்ட, பெறப்பட்ட மற்றும் அணுகப்பட்ட தகவல்களை உள்ளடக்கியதாக இருக்கும், எனினும், அத்தகைய தகவல்கள் இரகசியம் காக்கப்பட வேண்டிய தனிப்பட்ட தரவுகள் எடுக்கின்றபோது எங்களால் எதை வெளிப்படுத்த முடியும் என்பதைப் பொறுத்து எங்களுக்கு வரம்பிடப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவில் வசிப்பவர்களுக்குத் தரவு அணுகலையும் தரவு பெயர்வுத்திறனையும் நாங்கள் வழங்க வேண்டும் என்று CCPA கூறுகிறது.

குறிப்பிட்ட விதிவிலக்குகளுக்கு உட்பட்டு, தங்களின் தனிப்பட்ட தகவல்களை நீக்கக் கோரக் கலிபோர்னியாவில் வசிப்பவர்களுக்கு CCPA உரிமை வழங்குகிறது.

*CCPA*-இன் கீழ்த் தங்களின் உரிமைகளைப் பயன்படுத்தத் தேர்ந்தெடுத்துள்ள கலிபோர்னியாவில் வசிப்பவர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டுவதை *CCPA* தடை செய்கிறது.

*CCPA* கீழ் உள்ள கலிபோர்னியாவில் வசிப்பவர்களின் உரிமைகளைத் தள்ளுபடி செய்யும்படி அல்லது வரம்பிடும்படி கேட்கும் எந்தவொரு ஒப்பந்தத்தையோ அல்லது உடன்படிக்கையையோ *CCPA* தடை செய்கிறது.

மேலே உள்ள எதாவது கோரிக்கைகளை நீங்கள் நிறைவேற்ற முயற்சி செய்கிறீர்கள் என்றால் பின்வரும் தகவல்களுடன் *dataprotectionoffice@ltimindtree.com*-இல் தரவுகள் தனியுரிமை அலுவலரைத் தொடர்புகொள்ளவும்:

- முழு பெயர்:
- மின்னஞ்சல் முகவரி:
- நீங்கள் பயன்படுத்த விரும்பும் தரவுக்குரியவர்களின் உரிமை:
- *LTIMindtree* உடனான உறவு (பணி விண்ணப்பதாரர், மாணவர், வாடிக்கையாளர், ஒப்பந்ததாரர், *LTIMindtree*-இன் பணியாளர், வலைதளத்தைப் பார்வையிடுபவர், *LTIMindtree*-க்கு வருகை தருபவர், *LTIMindtree*-இன் முன்னாள் ஊழியர், *LTIMindtree*-இன் தரவுக்குரியவரின் சார்பாக, *16* வயதிற்குக் கீழ் உள்ள தரவுக்குரியவரின் சார்பாக)
- குடியிருக்கும் நாடு:
- கோரிக்கை விவரங்கள்:

நீங்கள், மேலே பட்டியலிடப்படாத மற்ற எதாவது சட்ட எல்லையைச் சார்ந்தவராக இருந்தால், *dataprotectionoffice@ltimindtree.com* என்ற மின்னஞ்சல் முகவரியைத் தொடர்புகொள்வதன் மூலம் நீங்கள் எங்களைத் தொடர்புகொள்ளலாம்.

தனிப்பட்ட தகவல்களை வழங்கும் கலிபோர்னியாவில் வசிப்பவர்களுக்கு, தகவல்களின் வகைகள் மற்றும் அந்தத் தொழில் நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் உட்பட மூன்றாம் தரப்பினரிடம் அவர்களின் நேரடி சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக (பொருந்தும் என்றால்) தங்களைப் பற்றி நாங்கள் பகிர்ந்த தகவல்களைக் கோரும் உரிமை உள்ளது. கலிபோர்னியாவில் வசிப்பவர்களின் தனிப்பட்ட தகவல்களை மூன்றாம் தரப்பினரிடம் அவர்களின் சொந்த நேரடி சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காகத் தற்போது நாங்கள் பகிர்வதில்லை.

மேலே குறிப்பிட்டுள்ளவை குறித்துக் கூடுதல் தகவல்களுக்கு, *LTIMindtree* கலிபோர்னியா தனியுரிமையைப் பார்க்கவும்.

## தானியங்கு முடிவெடுத்தலின் இருப்பு

உங்களின் தனிப்பட்ட தரவுகளின் தானியங்கு செயலாக்கத்தின் அடிப்படையில் மட்டுமே, உங்களுக்கான சட்டரீதியான அல்லது அதை ஒத்த விளைவுகளுடைய முடிவுகளை எடுக்க நாங்கள் உங்களின் தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்த மாட்டோம். ஒருவேளை எதிர்காலத்தில் தானியங்கு தனிநபர் முடிவெடுக்கும் செயல்முறையை மேற்கொண்டால், செயலாக்கத்திற்கு முன் நாங்கள் உங்களிடம் தெரிவிப்போம் மற்றும் உங்களின் கண்ணோட்டத்தை வெளிப்படுத்தி முடிவை எதிர்க்கும் உங்களின் உரிமை உட்பட உங்களின் உரிமைகள் குறித்து நாங்கள் உங்களிடம் தெரிவிப்போம்.

## மாற்றங்கள் குறித்து எங்களிடம் தெரிவிப்பதற்கான உங்களின் கடமை

உங்களைக் குறித்து நாங்கள் வைத்துள்ள தனிப்பட்ட தரவுகள் துல்லியமானதாகவும் தற்போதையதாகவும் இருப்பது முக்கியமாகும். எங்களுடனான உங்களின் உறவின்போது உங்களின் தனிப்பட்ட தரவுகள் மாறினால் எங்களிடம் தயவு செய்து தெரிவிக்கவும்.

# தொடர்பு விவரங்கள், புகார்கள் மற்றும் குறைகள்

உங்களிடம் ஏதாவது கேள்விகள், கருத்துகள், அல்லது பரிந்துரைகள், புகார்கள் அல்லது குறைகள் இருந்தால், உங்களின் தனியுரிமை உரிமைகளைப் பயன்படுத்த அல்லது ஏதாவது தனியுரிமை பிரச்சனைகள், தனிப்பட்ட தரவுகள் அல்லது தனிப்பட்ட தகவல்களை நாங்கள் பயன்படுத்தும் முறை குறித்து எங்களிடம் புகார் எழுப்ப அல்லது ஆலோசனை கேட்க விரும்பினால், எங்களின் நியமிக்கப்பட்ட தரவு பாதுகாப்பு அலுவலரை ("DPO") நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

தனிப்பட்ட தரவுகள் மற்றும் தனிப்பட்ட தகவல்கள் தொடர்புடைய புகார்கள் மற்றும் உங்களின் தனியுரிமை உரிமைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஏதாவது தகவல் தொடர்புகள் பின்வரும் தொடர்பு விவரங்களில் உள்ள தரவு பாதுகாப்பு அதிகாரியிடம் அனுப்பப்பட வேண்டும்:

***LTIMindtree லிமிடெட்டிற்கான உலகளாவிய தரவு தனியுரிமை அலுவலர்:***

- ஜகநாத் PV
- மின்னஞ்சல்:
  - dataprotectionoffice@ltimindtree.com
  - Jagannath.PV@ltimindtree.com
- முகவரி: தரவு தனியுரிமை அலுவலகம்

  கேட் எண். 5, L&T தொழில்நுட்ப மையம், சகி விகார் சாலை, போவை, மும்பை - 400072

கவனத்திற்கு: ஜகநாத் PV (தரவு பாதுகாப்பு அலுவலர்)

தொலைபேசி எண் - +91 22 67766776

***LTIMindtree லிமிடெட்டிற்கான தரவு தனியுரிமை அலுவலர் (ஜெர்மனி கிளை) மற்றும் ஐரோப்பியப் பிரதிநிதி:***

- மத்தியாஸ் மேஸ்டர்
  - மின்னஞ்சல் முகவரி - dataprotectionoffice.eu@ltimindtree.com
  - Matthias.Meister@ltimindtree.com

***யுனைடட் கிங்டம் பிரதிநிதி***

- வில்லியம் ஹட்டன்
  - மின்னஞ்சல் முகவரி - dataprotectionoffice@ltimindtree.com
  - William.Hatton@ltimindtree.com

***சுவிட்சர்லாந்து பிரதிநிதி***

மின்னஞ்சல் முகவரி - dataprotectionoffice@ltimindtree.com

***ஐக்கிய அரபு அமிரகம்***

மின்னஞ்சல் முகவரி - dataprotectionoffice@ltimindtree.com

©LTIMindtree | சிறப்புரிமை பெற்றது மற்றும் இரகசியமானது
2022

**தென்னாப்பிரிக்க பிரதிநிதி**

மின்னஞ்சல் முகவரி - dataprotectionoffice@ltimindtree.com

ஒரு சரியான காலத்திற்குள், வழக்கமாக 30 நாட்களுக்குள் உங்களின் புகார்களுக்குப் பதிலளிக்கத் தேவையான முயற்சிகளை நாங்கள் எடுப்போம்.

நீங்கள் தகுதிவாய்ந்த மேற்பார்வை அதிகாரியிடம் உங்களின் கவலையைத் தெரிவிக்கலாம் அல்லது புகார் செய்யலாம். ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள தரவு பாதுகாப்பு அதிகாரிகளின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்களை இங்கே காணலாம்.

LTIMindtree-இன் அலுவலகங்கள் உள்ள ஐரோப்பிய நாடுகளின் உள்ளூர் மொழியில் இந்தத் தனியுரிமை அறிக்கையின் ஒரு நகல் வேண்டும் என்றால் நீங்கள் DPO அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம் (மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பு விவரங்களில்).

நீங்கள் ஆஸ்திரேலியாவில் இருக்கிறீர்கள் மற்றும் உங்களின் தனியுரிமை சார்ந்த கவலையைத் திருப்திகரமாகத் தீர்க்க முடியவில்லை என்றால், ஆஸ்திரேலியத் தகவல் ஆணையரின் அலுவலகத்தை அவர்களின் வலைதளமான www.oaic.gov.au-இல் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

## எங்களின் தனியுரிமை அறிவிப்பில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள்

இந்தத் தனியுரிமை அறிவிப்பு கடைசியாக 14 நவம்பர் 2022 அன்று புதுப்பிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு அவ்வப்போது திருத்தப்படும் மற்றும் புதுப்பிக்கப்படும்.

இந்த அறிவிப்பு குறித்து உங்களுக்கு எதாவது கேள்விகள் இருந்தால், dataprotectionoffice@ltimindtree.com என்ற மின்னஞ்சல் முகவரியில் LTIMindtree-இன் தரவு பாதுகாப்பு அதிகாரியைத் தொடர்புகொள்ளவும். தனியுரிமைக்கான LTIMindtree-இன் பொறுப்பு குறித்த கூடுதல் தகவல்களுக்காக வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ள எங்களின் LTIMindtree உலகளாவிய தரவு தனியுரிமை கொள்கை மற்றும் LTIMindtree கலிபோர்னியா தனியுரிமை அறிக்கையையும் நீங்கள் பார்க்கலாம்.

## *LTIMindtree Limited*

### தொடர்பு கொள்வதற்கான தகவல்கள்

*மின்னஞ்சல்: dataprotectionoffice@lyiindtree.com*

*கேட் எண். 5, L&T தொழில்நுட்ப மையம்,*

*சகி விகார் சாலை,*

*போவை, மும்பை - 400072*

*இந்தியா*
*தொலைபேசி எண் - +91 22 67766776*
*வலைதளம் - www.LTIMindtree.com*

©LTIMindtree | *சிறப்புரிமை பெற்றது மற்றும் இரகசியமானது 2022*

LTIMindtree

*LTIMindtree* ஒரு உலகளாவிய தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் டிஜிட்டல் சொல்யூஷன்ஸ் நிறுவனமாகும், இது தொழில் மாதிரிகளை மறுகட்டமைக்கவும், புதுமையை வேகப்படுத்தவும், டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் வளர்ச்சியை அதிகரிக்கவும் உதவுகிறது. *700*-க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு டிஜிட்டல் ட்ரான்ஸ்ஃபர்மேஷன் பார்ட்னராக உள்ள *LTIMindtree*, ஒன்றிணையும் உலகத்தில் சிறந்த போட்டி வேறுபாடு, வாடிக்கையாளர் அனுபவங்கள், மற்றும் தொழில் முடிவுகளை இயக்குவதற்க்கு உதவ விரிவான டொமைன் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தைக் கொண்டுவருகிறது. *33* நாடுகளில் *85,000*-க்கும் மேற்பட்ட திறமையான மற்றும் தொழில் முனைவோர்களால் இயக்கப்படும் *LTIMindtree* - ஒரு *Larsen & Toubro* குழும நிறுவனம் - தொழிலில் ஏற்படும் மிகவும் சிக்கலான சவால்களைத் தீர்ப்பதிலும் பெரிய அளவில் மாற்றத்தை வழங்குவதிலும் முன்னோடியான *Larsen & Toubro Infotech* மற்றும் *Mindtree*-இன் தொழில்துறையில் சிறந்து விளங்கும் பலங்கள் ஒன்றிணைக்கிறது. மேலும் தகவல்களுக்கு, *www.ltimindtree.com*-ஐ பார்வையிடவும்.